**இரு மொழியிலான அனுகூலத்தைப் புரிந்துகொள்ளுதல்**

தமது ஆசிரியர்களினாலும், பெற்றோர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முன்னதாக விருத்திசெய்யப்பட்ட தமது மொழித் திறன்களைப் பார்க்கின்ற மாணவர்கள் மிக அதிகளவில் தன்னம்பிக்கையை உணர்வதுடன், புதியதொரு மொழியைக் கற்பதில் சம்பந்தப்பட்டுள்ள அபாயங்களையும் எடுக்கின்றனர். தமது முதலாவது மொழிக்கு ஒரு பதிலீடாக அன்றி, அம்மொழிக்கான ஒரு மேலதிக மொழியொன்றாக ஆங்கிலத்தை நோக்குவதற்கு அவர்களுக்கு இயலக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கில மொழி கற்பவர்களின் நடைமுறையிலான உபயோகத்தையும், முன்னேற்றத்தையும் மேம்படுத்துவதைத் தொடர்வதிலிருந்து விளைகின்ற பெரும் எண்ணிக்கையிலான உறுதியான விளைவுகள் உள்ளன.

முதலாவது மொழிக்கான மரியாதையும், அதன் பயன்பாடும் பின்வருன உட்பட கற்பவர் ஒருவரை தன்னம்பிக்கையுடன் கட்டியெழுப்புவதற்கும், மேலதிக மொழிகளின் செயற்றிறனான கற்றலுக்கும் அத்துடன் நூற்கல்விச் சாதனைக்கும் பங்களிக்கின்றது.

- உளவியல் நெகிழ்தன்மையை விருத்திசெய்தல்
- பிரச்சனையைத் தீர்க்கும் திறன்களை விருத்திசெய்தல்
- குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பாடலைக் கொண்டிருத்தல்@
- கலாசார ஸ்திரத்தன்மையினதும், தொடர்ச்சியான நிலையினதும் உணர்வொன்றை அனுபவித்தல்@
- கலாசார மற்றும் குடும்பப் பெறுமதிகளைப் புரிந்துகொள்ளுதல்
- உலகளாவிய பிரச்சனைகளின் விழிப்பியலை விருத்திசெய்தல்
- தொழில்வாய்ப்புக்களை விஸ்தரித்தல்

ஒன்றுக்கு மேற்பட்ட மொழியில் தொடர்பாடலைக் கொண்டிருக்கக்கூடியதும், படிப்பறிவைக் கொண்டிருப்பதுமான மாணவர்கள் உலகளாவிய சமூகமொன்றில் பங்கெடுப்பதற்கு சிறந்த வகையில் தயார்நிலையில் உள்ளனர். இது தனிப்பட்ட ஒருவருக்கு நன்மைகளாக இருக்கின்ற போதிலும், பல்-மொழியிலான வேலைப்படையொன்றைக் கொண்டிருப்பதிலிருந்து கனடிய சமூகமும் ஆதாயத்தைக் கொண்டிருக்கிறது. ஒன்ராறியோ பாடசாலைகளில் தற்போது பிரவேசிக்கும் சிறுவர்கள் கனடாவுக்கு பெறுமதிமிக்கதொரு வளமாக விளங்குவார்கள்.

- ஆங்கில மொழி கற்பவர்களுக்கு ஆதரவளித்தல்@ தரங்கள் 1 முதல் 8 வரையிலான ஒன்ராறியோ கல்வி கற்பவர்களுக்கான ஒரு செயன்முறை வழிகாட்டி